


# 30.04.2026 செய்திகள்

## நியூஸிலாந்து ஒப்பந்தம்

» இறக்குமதி – ஏற்றுமதி

- நியூஸிலாந்தின் இறக்குமதியில் இந்தியாவின் பங்கு வெறும் 1.84% மட்டும்தான். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் குறைந்தது இரட்டிப்பாகும் என்று நம்பலாம்.
- இந்தியாவின் அனைத்து ஏற்றுமதிகளுக்கும் 100% இறக்குமதி வரி விலக்கு அளிக்க நியூஸிலாந்து முன்வந்திருக்கிறது.
- ஆயத்த ஆடைகள், தோல் பொருள்கள், பொறியியல் தொடர்பான உதிரி பாகங்கள் (என்ஜினீயரிங் ஸ்பேர் பார்ட்ஸ்), காலணிகள் ஆகியவற்றுக்கான 10% இறக்குமதி வரி விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது.
- அதேபோல, மருந்துத் தயாரிப்புகள், வேளாண் மதிப்புக்கூட்டுப் பொருள்கள், மின்னணு சாதனங்கள் உள்ளிட்டவற்றின் 5% வரியும் நியூஸிலாந்தால் அகற்றப்படுகிறது.
- ஆண்டொன்றுக்கு 1.9 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஜவுளி, ஆயத்த ஆடைகளை நியூஸிலாந்து இறக்குமதி செய்கிறது.
- 11 பில்லியன் டாலர் மதிப்புள்ள என்ஜினீயரிங் சார்ந்த பொருள்களும், தோல் பொருள்கள், மருந்துகள், நெகிழிப் பொருள்கள், கடல்சார் பொருள்களும் நியூஸிலாந்தால் இறக்குமதி செய்யப்படு கின்றன. இப்போது இந்தியாவுக்கு அதன் கதவுகள் திறந்துவிடப் பட்டிருக்கின்றன.
- இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் செராமிக்ஸ், காலணிகள், மோட்டார் வாகனங்கள், மோட்டார் வாகன உதிரி பாகங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 10% இறக்குமதி வரியை நியூஸிலாந்து விலக்கிக் கொண்டிருக்கிறது.
- அதேபோல கம்பளி, நிலக்கரி, மதுபானங்கள், அவகோடா – ப்ளூ பெர்ரி உள்ளிட்ட பழ வகைகள் போன்றவற்றுக்கு இந்தியா விதித்திருந்த 95% இறக்குமதி வரியை இப்போது ரத்து செய்கிறது.
- ஒரேயடியாக, இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா இறக்குமதிக்கான கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது.
- பால் பொருள்கள், வெங்காயம், சர்க்கரை, நறுமணப் பொருள்கள், சமையல் எண்ணெய், ரப்பர் உள்ளிட்ட இந்தியாவில் உற்பத்தியாகும் வேளாண் பொருள்களுக்கு எந்தவித வரிச் சலுகையும் நியூஸிலாந்துக்கு வழங்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும்.

» ஏன் இந்த ஒப்பந்தம்

- இந்தியா – நியூஸிலாந்து உறவின் வலிமை இரு நாடுகளும் ஒன்றுக்கு ஒன்று வலுசேர்க்கும் என்பதில்தான் இருக்கிறது.

SURESH'

- உலகத் தரத்திலான சேவைக் கட்டமைப்புடன் கூடிய, 140 கோடி மக்கள் தொகையுள்ள நாடு இந்தியா. அதில் பெரும் பகுதி நுகர்வு சார்ந்த நடுத்தர வருவாய்ப் பிரிவினர்.
- வர்த்தகத்துக்கு வாய்ப்பளிக்கும் இந்த மிகப் பெரிய சந்தை, நியூஸிலாந்துக்குக் கிடைத்திருக்கிறது. அதேபோல, வேளாண், உற்பத்தித் துறைகளில் மேம்பட்ட தொழில் நுட்பத்தை நியூஸிலாந்திடமிருந்து இந்தியா பெற முடியும்.
- இந்தியாவுடன் நியூஸிலாந்து வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு இன்னொரு காரணம் உண்டு. இப்போது தனது பெரும்பாலான தேவைகளை சீனாவிடமிருந்து இறக்குமதி செய்கிறது நியூஸிலாந்து.
- சீனாவை மட்டுமே நம்பியிருக்காமல், அடுத்தாற்போல வளர்ந்து கொண்டிருக்கும் பொருளாதாரமான இந்தியாவிடம் நெருக்கம் ஏற்படுத்திக் கொள்ள நியூஸிலாந்து விழைவதில் வியப்பில்லை.
- இந்தியாவும் (49.9%) நியூஸிலாந்தும் (67.4%) சேவைத் துறையால் வழிநடத்தப்படும் பொருளாதாரங்கள்.
- சுற்றுலா, கல்வி, கணினித் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு என்று இரு நாடுகளுக்கு இடையேயும் 118 சேவைகளுக்குச் சந்தை திறந்துவிடப் பட்டிருக்கிறது என்பதுடன் இரு நாடுகளுக்கிடையே பயணிக்கும் வாய்ப்பும் எளிதாக்கப்பட்டிருக்கிறது.
- இந்த ஒப்பந்தத்தில் கவனிக்கப்பட வேண்டிய அம்சம் 'இடைக்கால நுழைவு அனுமதி' (டெம்ப்ரரி விசா).
- அதன் மூலம் தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த 5,000 பேர் மூன்றாண்டு காலம் நியூஸிலாந்தில் தங்கிப் பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய 'ஆயுஷ் மருத்துவப் பட்டதாரிகளான வல்லுநர்கள், இந்திய சமையல்கலை நிபுணர்கள், இசை ஆசிரியர்கள் உள்ளிட்டோர் நியூஸிலாந்தில் பணியாற்ற முடியும்.
- அதேபோல, நியூஸிலாந்தில் படிக்கும் இந்திய மாணவர்கள் வாரத்துக்கு 20 மணி நேரம் பகுதிநேர வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் ஒப்பந்தம் அனுமதி அளிக்கிறது.
- வேளாண் தொழில்நுட்பம், உணவு பதப்படுத்துதலில் நியூஸிலாந்து முன்னணி வகிக்கிறது. இந்த ஒப்பந்தம் நாம் அவற்றைப் பெறுவதற்கு வழிகோலும்.
- உலகளாவிய அளவில் 422 பில்லியன் டாலர் முதலீடு செய்திருக்கும் நியூஸிலாந்து, அதில் 10% அளவிலாவது இந்தியாவில் முதலீடு செய்தாலும் கூட, இந்த ஒப்பந்தம் வெற்றி பெற்றதாகப் பொருள்!

SURESH'

## நகரமயமாதல் மட்டும்தான் வளர்ச்சியா?

» விரிவடைந்த பணிகள்

- அரசமைப்புச் சட்டக்கூறு 280 இன் கீழ், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை குடியரசுத் தலைவரால் அமைக்கப்படும் நிதி ஆணையம், மத்திய – மாநில அரசுகளுக்கு இடையிலான நிதிப் பகிர்வைத் தீர்மானிக்கும் மிக முக்கிய அமைப்பு.
- 1993இல் மேற்கொள்ளப்பட்ட 73ஆவது, 74ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்குப் பிறகு, இந்த ஆணையத்தின் பங்கு கணிசமாக விரிவடைந்தது.
- மாநில அரசுகளுக்கு மட்டுமன்றி, ஊரக உள்ளாட்சிகள் (Rural Local Governments), நகர்ப்புற உள்ளாட்சிகள் (Urban Local Governments) ஆகிய எவ்வாறு நிதிப் பகிர்வு செய்ய வேண்டும் எனப் பரிந்துரைக்கும் பொறுப்பு இந்த அமைப்புக்கு உண்டு.


TUTICORIN 99445 11344 | TIRUNELVELI 98942 41422 | RAMANATHAPURAM 75503 52916 | MADURAI 98431 10566 | CHENNAI 97555 52003 | COVAI 90433 10773 | TENKASI 98840 51717

SURESH' IAS ACADEMY

- அந்தந்த மாநில நிதி ஆணையங்களின் (State finance commission) பரிந்துரைகளின் அடிப்படையில் ஊரக உள்ளாட்சிகளுக்கும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் அவற்றின் வளங்களை நிரப்ப ஒரு மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

» நகரமயமாதலுக்கு முக்கியத்துவம்

- ஒவ்வொரு நிதி ஆணையமும் பரிந்துரைகளுக்கு முன்னால் தனது அணுகுமுறையை (Approach) விளக்கும்.
- 16ஆவது நிதி ஆணையம் முதன்முறையாக நகரமயமாதலைத் தனித்துவமாகக் குறிப்பிட்டுள்ளது. 'வேகமான நகரமயமாதல் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டு கோலாகச் செயல்படும்' என ஆணையம் கருதுகிறது.
- ஆனால், இத்தகைய அணுகுமுறை இந்தியாவின் சமூக-அரசியல் சூழல்களை உள்ளடக்கிய ஒரு பரந்துபட்ட பார்வையைத் தந்துள்ளதா என்கிற கேள்வி எழுகிறது.
- நகர வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியுடன் மட்டுமே தொடர்புடையது அல்ல; அது சமூகச் சமத்துவம், மக்கள் பங்கேற்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, வாழ்வாதாரப் பாதுகாப்பு ஆகிய பல பரிமாணங்களைக் கொண்டது.
- இவற்றைத் தவிர்த்துவிட்டு நகரமயமாதலை மட்டும் முதன்மையான இயக்கும் காரணியாகப் பார்ப்பது, (inclusive development) நோக்கத்துக்கு முழுமையாகப் பொருந்தாது.

» தரவின் தரம்

- 10ஆவது நிதி ஆணையம் முதல் தற்போதுவரை, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான நிதிப் பங்கு தொடர்ந்து அதிகரித்துவருகிறது.
- ஆனால், இந்த உயர்வுக்கு அடிப்படையாக இருக்கும் தரவுகளின் தரம் என்ன? அதே 16ஆவது நிதி ஆணைய அறிக்கையிலேயே, உள்ளாட்சிகளுக்கான நிதித் தரவுகளின் தரம் தொடர்பான சிக்கல்கள் இறுதிவரை நீடித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்நிலையில், தரவின் தரம் உறுதி செய்யப்படாமல் நகர்ப்புற உள்ளாட்சிகளின் பங்கைத் தொடர்ந்து அதிகரிப்பது, திட்டமிடலிலும் நிதி ஒதுக்கீட்டிலும் பெரும் சிக்கல்களை உருவாக்கலாம்.
- 14ஆவது, 15ஆவது நிதி ஆணையங்களில் இல்லாத 'Urbanisation Premium' என்கிற புதிய கருத்துருவாக்கம் 16ஆவது ஆணையத்தில் வலியுறுத்தப்படுகிறது.
- நகரமயமாதலை மாநிலங்கள் வேகப்படுத்தினால் கூடுதல் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்பதே இதன் சாரம்.
- நிதிச் சமநிலையைப் பேணவேண்டிய ஓர் ஆணையம், நகரமயமாதலை முன்னெடுக்கும் ஒரு கொள்கை அமைப்பைப் போலச் செயல்படுவது போன்ற தோற்றத்தையே இது ஏற்படுத்துகிறது.

» அதிகாரப் பரவல் எங்கே?

- நகரங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களை (peri-urban villages) நகர்ப்புற உள்ளாட்சிகளுடன் இணைக்கும் மாற்றுக் கொள்கையை (Rural-urban transition policy) இந்த ஆணையம் பரிந்துரைக்கிறது. ஆனால், இதில் கிராம சபையின் அதிகாரம் குறித்த தெளிவான குறிப்புகள் இல்லை.
- தமிழ்நாட்டில் நகராட்சிகளுடன் இணைக்கப்படுவதை எதிர்த்துப் பல கிராம ஊராட்சிகள் கிராம சபைத் தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளன; போராட்டங்களும் நடத்தப்படுகின்றன.
- இது அவர்களின் அரசமைப்புச் சட்ட உரிமையாகும். ஆனால் 16ஆவது நிதி ஆணையம், கிராம சபையைப் பற்றிப் பேசாமல் 'பொது ஆலோசனை' (Public Consultation) பற்றிக் குறிப்பிடுவது, கிராம ஊராட்சிகளின் அதிகாரத்தைக் குறைக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

- 73ஆவது, 74ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள், உள்ளூர்ப் பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி சார்ந்த திட்டங்களை உள்ளாட்சிகள் வகுக்கும் என்று கூறின.
- ஆனால் 16ஆவது நிதி ஆணைய அறிக்கையில் இந்த இரண்டு முக்கிய அம்சங்களும் இடம்பெற வில்லை.
- 14ஆவது, 15ஆவது நிதி ஆணைய அறிக்கைகளில் உள்ளாட்சிகள் குறித்து 'Local Governments' என்ற தலைப்பில் தனி அத்தி யாயம் இருந்தது.
- ஆனால் 16ஆவது நிதி ஆணைய அறிக்கையில் அது 'Local Bodies' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மொழி மாற்றம் சிறியதாகத் தோன்றினாலும், உள்ளாட்சிகளை ஒரு நிர்வாக அமைப்பாக மட்டுமே பார்க்கும் போக்கை இது பிரதிபலிக்கிறது.
- உள்ளாட்சிகள் என்பவை வெறும் அமைப்புகள் அல்ல; அவை அரசமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலை அரசாங்கம். 14ஆவது நிதி ஆணையம் இதைச் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத் தக்கது.
- பல மாநிலங்களில் உள்ளாட்சித் தேர்தல்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிய நேரத்தில் நடத்தப்படாதது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.
- ஆனால், 16ஆவது நிதி ஆணைய அறிக்கையில் அதைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. வழங்கப்படும் நிதியில் (tied and untied grants) ஊரக உள்ளாட்சிகள் எந்தெந்த வேலைகளைச் செய்யலாம் என்பதைக் கிராம சபை தீர்மானிக்கும் என்று 16ஆவது நிதி ஆணையம் சொல்கிறது.
- கிராம வளர்ச்சிக்குத் தேவையான வேலைகளில் மக்கள் பங்கேற்பை உறுதி செய்துள்ளது. ஆனால், நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்களின் பங்கேற்பைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.
- நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்கள் பங்கேற்பை உறுதிசெய்யும் Area Sabha போன்ற அமைப்புகள் குறித்துக் குறிப்பிடத்தக்க விவாதமும் இல்லை.
- தமிழ்நாட்டில் உள்ள இது போன்ற அமைப்புகளை வலுப்படுத்துவது நகர்ப்புற உள்ளாட்சி ஜனநாயகத்தை மேம்படுத்த உதவும்.

» <u>நகர-கிராம சமநிலையின் அவசியம்?</u>

- நகரமயமாதலை ஊக்குவிப்பது என்றால் அது நகரங்களின் நிர்வாகத் திறனையும் சேவை வழங்கும் திறனையும் வலுப்படுத்துவதோடு தொடர்புடையதா என்பது இன்னொரு கேள்வி.
- இந்தியாவின் பல நகரங்களில் குடிநீர், கழிவுநீர் மேலாண்மை, குடியிருப்பு வசதி, போக்குவரத்து போன்ற அடிப்படைச் சேவைகளில் ஏற்கெனவே பல்வேறு சிக்கல்கள் நிலவுகின்றன.
- இந்த நிலையில், உள்ளாட்சி நிர்வாக அமைப்புகளின் திறனை அதிகரிக்காமல் நகர்ப்புற எல்லைகளை விரிவுபடுத்துவது, புதிய பகுதிகளை நகராட்சிகளுடன் இணைப்பது ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டால் அது நகர்ப்புற நிர்வாகத்தை மேலும் சிக்கலாக்கலாம்.
- அதேபோல், நகரமயமாதலை வளர்ச்சியின் ஒரே வழியாகப் பார்க்கும் அணுகுமுறையால், கிராமப்புற வளர்ச்சி இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும் அபாயமும் உள்ளது. இந்தியாவின் சமூக அமைப்பு பெரும்பாலும் கிராமங்களை மையமாகக் கொண்டதுதான்.
- கிராமப்புறங்களில் உள்ள உள்ளாட்சிகள் வலுப்பெறாமல், அவற்றின் பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி உறுதி செய்யப்படாமல் நகரமயமாதலை மட்டும் ஊக்குவிப்பது சமநிலையற்ற வளர்ச்சியை உருவாக்கும்.
- நகரமயமாதலை ஊக்குவிப்பது அவசியம் தான். ஆனால் அது கிராம உள்ளாட்சிகளின் அதிகாரத்தையும் சமூக நீதி நோக்கத்தையும் மக்கள் பங்கேற்பையும் பாதிக்கக் கூடாது.


TUTICORIN 99445 11344 | TIRUNELVELI 98942 41422 | RAMANATHAPURAM 75503 52916 | MADURAI 98431 10566 | CHENNAI 97555 52003 | COVAI 90433 10773 | TENKASI 98840 51717